மறுத்துவிட்டால் அந்தப் பணம் வீணாகப் போகும் என்ற அடிப்படையிலேதான் அவர்கள் அங்கே செய்வதற்கு மறுக்கிறார்கள். ஆனால் நிறைய இடங்களிலே, கொல்லிமலை போன்ற இடங்களிலே நூற்றுக்கணக்கான ஏக்கரை நாம் எடுத்து மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். சென்னையிலே கூட மூலிகைப் பண்ணையை ஏற்படுத்தி வருகிறோம். எனவே அங்கே நல்ல மூலிகை கிடைக்கும் என்று சொன்னால் அதைப் போய் நாம் தட்டிக்கழிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற தேவஸ்தானம் நமக்கு நீண்ட காலக் குத்தகைக்கு அந்த 33 ஏக்கரை கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் அதிலே எவ்வளவு வேண்டுமானாலும் செலவழித்து நாம் அங்கே பயிரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தேவஸ்தானத்திடத்திலே பேசி அதை நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசை பொறுத்தவரையிலே தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

6--

ஓசூர்-பெங்களூர் துரித இரயில்

*65342--திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தொழிற்சாலைகள் நிறைந்துள்ள ஓசூர் நகருக்கும் பெங்களூருக்கும் இடையே ஓர் துரித இரயில் (Fast Non-Stop Train) இயக்க மத்திய அரசுக்கு பரிந்துரைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது சேலம்-பனஸ்வாடி மீட்டர்கேஜ் தடத்தில் பெங்களூரில் உள்ள பனஸ்வாடிக்கும் ஓசூருக்கும் இடையே மூன்று இணை பயணிகள் இரயில் வண்டிகள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தற்போதைய

1996 பிப்ரவரி 15]

பயணிகள் போக்குவரத்துக்குப் போதுமானதாக உள்ளது. சேலம்-பனஸ்வாடி இடையே உள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதை அகலப் பாதையாக மாற்றப்படவுள்ளது. இதனால் ஒசூருக்கும் பெங்களூருக்கும் இடையே நேரடி இரயில் போக்குவரத்து ஏற்படவுள்ளதால் இதுகுறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை அவசியம் இல்லையெனக் கருதப்படுகிறது

முற்பகல் 10.30

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்த இரயில் பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டு வருகிறது. இரண்டாவது பல்வேறு நேரங்களில் கர்நாடகத்தில் நடக்கக்கூடிய பிரச்சினைகள் காரணமாக நம் மாநிலத்திலிருந்து செல்லக்கூடிய வண்டிகள் எல்லாம் ஓசூரிலே நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகிற காரணத்தால் ஒசூருக்கும் பெங்களூருக்கும் துரித இரயில் விட மத்திய அரசுக்கு தாங்கள் சிபாரிசு செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு அங்கே தேவைக்கு ஏற்ப துரித இரயில்கள் இயக்கப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இரயில்கள் இயக்கியவுடனேயே அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டு இருப்பதாக எங்களுக்கு மத்திய அரசிடமிருந்து கடிதங்கள் வரப்பெற்று இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசினுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு தாங்களே வேண்டும் என்றாலும் அந்த முயற்சியை மேற்கொள்ளலாம். உரிய கடிதங்கள் வேண்டும் என்றாலும் அரசு மத்திய அரசுக்கு அனுப்பியதற்குப் பிறகு அதனுடைய நகலை வேண்டுமானாலும் உங்களிடத்திலே ஒப்படைக்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இயக்கப்படுகின்ற ரயில்கள் இரவு நேரங்களிலே வருகின்றன. அங்கே தொழிற்சாலைகள் மிகவும் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தால் தொழிலாளர்கள் வந்து போக வசதியாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக துரித இரயில்கள் வேண்டும் என்று கேட்கிறோம். அரசு பரிந்துரை செய்தால் அதனுடைய நகலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல கொடுத்தால் மத்திய அரசிடம் நாங்களும் சென்று அதனை வாங்குவதற்கான

முயற்சிகளில் ஒத்துழைப்போம் என்று சொல்லி மீண்டும் மத்திய அரசுக்குத் தாங்கள் சிபாரிசு செய்வீர்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு செல்வாக்கு தொடர்ந்து இன்னும் வைத்து இருக்கிறீர்களா!

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசைப் பொறுத்தவரையிலும் நினைப்பதற்குள்ளே முடிக்கக்கூடிய அரசாக ஆற்றல் மிக்க அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு இந்த அரசு உடனடியாகப் பரிந்துரை செய்து அந்த நகலை உங்களுக்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூர் நகரமும், பெங்களூர் நகரமும் ஓரளவுக்கு இரண்டு நகரங்களும் ஒன்றாக ஆகிவிட்டன. எடுத்துக்காட்டாக தாம்பரமும் சென்னையும் போல இன்று ஒசூரும், பெங்களூரும் இருந்து கொண்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகள் ஒசூரிலே இருந்தாலும்கூட அங்கே பணியாற்றுகின்ற டெக்னீஷியன்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பெங்களூரிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இங்கே சென்னை மத்தியிலேயிருந்து சென்று கொண்டிருக்கின்ற மின்சார ரயிலைப் போல ஒசூரிலிருந்து பெங்களூருக்கு ரெகுலராகச் செல்லக்கூடிய வாய்ப்பை அரசு உருவாக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களில் தான் இந்த மீட்டர் கேஜ் போன்றவைகளை எல்லாம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் மின்சார ரயில் விடப்பட்டிருக்கிறது. அதேபோல் பெங்களூருக்கும் ஒசூருக்கும் இயக்கப்படுமா என்பதை அரசு பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு எங்களுக்குப் புரிகிறது. பெங்களூரில் பல்வேறு பணிகளைச் செய்கின்றவர்கள் ஒசூரில் தங்கி தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பெங்களூரில் இருக்கின்ற வாடகை, அங்கே உள்ள இடத்தினுடைய மதிப்பு ஆகியவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால்

1996 பிப்ரவரி 15]

பக்கத்திலே இருக்கின்ற தமிழகத்திலே அவர்கள் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக போதுமான அளவுக்கு பேருந்துகளை நாம் 24 மணி நேரமும் இயக்கிக்கொண்டிருக்கிறோம். தேவைக்கு ஏற்ப பேருந்துகளை நாம் இயக்குகிறோம். ஆகவே பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது நீங்கள் சொல்லுவது போல் மின்சார ரயில் விடுவதற்கு வாய்ப்பு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக ஓசூர் நகரம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கிருட்டிணகிரி பகுதியிலிருந்து நிறைய தொழிலாளர்கள் ஓசூருக்குச் சென்று வருகிறார்கள். ஆகவே, பெங்களூரிலிருந்து ஓசூருக்கு வருகின்ற இரயில் பாதையை கிருட்டினகிரி வரைக்கும் நீட்டிக்க மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மும்பய்-திருநெல்வேலி அல்லது தூத்துக்குடி–திருநெல்வேலி, திருவனந்தபுரம்-மும்பய் இரயில்கள் அனைத்தும் ஓசூர் வழியாக எதிர்காலத்தில் செல்வதற்கு அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா, இப்படி செய்தால் இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீரும் என்று.......

முற்பகல் *10–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்னும் மீட்டர் கேஜை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கேட்கிற பாதைகள் எல்லாம் பிராட் கேஜ் ஆக வர வேண்டும். அது வந்த பிறகு கேளுங்கள்.

வினா எண் 7, டாக்டர் எஸ்.எஸ். ஆர். இராமதாஸ், மாண்புமிகு உணவு அமைச்சர்.